ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/35 - 2018 ජූලි මස 11 වැනි බදාදා - 2018.07.11

*2079/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/1978* (x).

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பீவி 72548 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கீடு இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* II *இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதுமான பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச்செல்கின்றதாக சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின்கண் உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

*(இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது 2012, செத்தெம்பர் 28 ஆந் திகதிய 995 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கு இணங்கியொழுகுவதில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே தடவையில் மூன்று (3)* 'S' *சித்திகள் அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.*

1A - PG 4116 — 507 (2018/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** II

| நிரல் I<br><br>பட்டம் | நிரல் II<br><br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் இளமாணி | பிஐரீ |

*கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ,*
*உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2018, யூலை 06.*

*07-830*